## 11. பலகிரி.

36

### *அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

### *பண் - பஞ்சமம்.*

**க**னைகழ னிலவிடு சததள விணையடி கருதிடு தவமுடையோர்
மனவெளி தனிநட மிடுமர ஹரசிவ வடிவுடை யயிலரசே
பனிமலி யிதழவிழ் தொடைய லணிபெரும பலகிரி யுறைமுருகா
இனிமைசெய் புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 1

**க**ளிகிளர் முசுமுக னெனுநிரு பனரிய கடவுளர் கதியினுமேற்
கொளவரு ளினனென வழிபடும் விபுதர்கள் குலவுற வுளசிவனே
பளக வதரவுமை கரம்வள ரழகிய பலகிரி யுறைமுருகா
இளைமலி புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 2

**அ**ருமறை புகழ்நிறை குருபர மிதுவெனு மமைவொடு தினமுணர்வாய்ச்
சரவண பவகுக வெனவழி படுபவர் சனன மரணமறவே
பரிவுட னடிமைகொ ளகணித பசுபதி பலகிரி யுறைமுருகா
இருசுறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 3

**து**ணிசெ யிரவிகுல வரச னொருவனுயர் சுசியொடு தபசுசெயாத்
திணிமணி மதுரையி னரனது தொழினனி செயவென நசைஇயவா
பணிய குமரகுரு பிரணவ வுருவொளிர் பலகிரி யுறைமுருகா
இணையறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 4

---

1. ***பலகிரி*** = *குன்றுதோறாடல்.*

2. ***பளகம்*** = *பவளம் என்பதன் மரூஉ.* ***இளை*** = *தலைக்காவல் ;* ***பி - நிகண்டு*** *காண்க.*

3. ***இருசு*** = *செவ்வை ;* ***ரகரவெதுகை*** *காண்க.*

**இ**லகு கயனயன வுமையனு தினம்வள ரிளைமலி மணி மதுரைப்
புலவர்க டலைவனை யறுமுக வருணெறி புகவரு ளியபரனே
பலநவ மணிநிறை வளமுட னுயரிய பலகிரி யுறைமுருகா
இலவச வளியுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 5

**ந**டமயின் மிசையொரு சுடர்மணி யெனவரு நவசபை களின்முதல்வா
தடவிடின் னிசைமுனி பகிரத னடிமைகொள் சமரச நிலையிறைவா
படமுடை மணியர வணிபவர் மனமகிழ் பலகிரி யுறைமுருகா
இடரறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 6

**ச**கல கலைகளையு முணர்வுறு வலிமலி தவமிகு குறுமுனியைச்
சுகுர்த வடிமைமுறி கொளுமொரு குருபர சுருதிகள் புகழ்சிவனே
பகநிறை சரவண பவமறை யவர்புகழ் பலகிரி யுறைமுருகா
இகழ்வறு புரிவுட னெனையு மடிமை கொள விதுநல தருணமரோ. 7

**பு**துமல ரளக வனிதையரும் விழைவுகொள் பொருவறு குறமயிலாள்
அதிமது ரவரவ ரசநுகர் தலைவவொள் ளமுதவி புதர்பரனே
பதும நனைநிரைக ளவிழும் வளமொழுகு பலகிரி யுறைமுருகா
இதமிகு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 8

**வி**யனென வெயில்விரி விமலர் கயிலைமலை மிசைநிறை கொலுவுடையோய்
மயறெறு கவுணியன் விடமமு தெனநுகர் வலியுள னழகுடையான்
பயிறமி ழணிபுனை பசுபதி யுடன்மொழி பலகிரி யுறைமுருகா
இயல்புறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 9

**மு**ரணறு புகழ்சொன வருண கிரியைநிஜ முடிபுடை யறிஞனெனத்
தரணிய ருவணையர் புகழ வருளினவொர் தகரவெ ளியிறைவனே
பரவரு நெடுவள மலிய முகில்கள்கவி பலகிரி யுறைமுருகா
இரிபறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ. 10

நந்தன வருடம் பங்குனி மாதம் 21ஆம் தேதி மந்தவாரம்.

---

*8. **அரவம்** = ஒலி.*